# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1798/12 - 2013 පෙබරවාරි මස 18 වැනි සඳුදා - 2013.02.18

*1798/12 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 18 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (I)- பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

### *2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சிவில் விமானப் போக்குவரத்துச் சட்டம்*

*14 (3) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

**மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் பெருந்திட்டத்திற்கான அங்கீகாரம்**

*தென் மாகாணத்தின் ஹம்பாந்தோட்டை மற்றும் லுணுஹம்வெஹர பிரதேச செயலகங்களின் நிர்வாகப் பிரதேசங்களில் அமையப்பெற்றுள்ள மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் பெருந்திட்டத்திற்கு 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சிவில் விமானப் போக்குவரத்துச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம், இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை பின்வரும் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்குமிணங்க அங்கீகாரத்தினை வழங்குகின்றதென்பதனை இத்தால் சகல பொதுமக்களுக்கும் அறியத்தரப்படுகின்றது.*

*1. விமான நிலைய பெருந்திட்டமொன்றானது விமான நிலையமொன்றின் முற்று முழுதான ஆய்வொன்றாக இருப்பதுடன், இது எதிர்கால விமானப் போக்குவரத்துத் தேவைகளுக்கு முகங்கொடுப்பதற்கான குறுங்கால, நடுத்தர மற்றும் நீண்டகால அபிவிருத்தித் திட்டங்களை பொதுவாக விளக்கி நிற்கும் அதே சமயம், இது விமான நிலைய அபிவிருத்திக்கான பெருந்திட்டத்தின் மனுதாரரின் தந்திரோபாயமாகவும் காணப்படுகின்றது. பெருந்திட்டமொன்றின் இலக்கு யாதெனில், இயலாற்றுகை, சூழல் மற்றும் சமூக பொருளாதார விளைவுகளைக் கருத்திற் கொள்ளும் அதே வேளை, விமானப் போக்குவரத்துத் தேவையினை கிரய வினைத்திறன் அடிப்படையில் திருப்திப்படுத்தும் எதிர்கால விமான நிலைய அபிவிருத்திக்காகத் தேவைப்படும் வரையறைகளை வழங்குவதுமாகும். இதன் பிரகாரம், வரையறுக்கப்பட்ட இலங்கை விமான நிலையம் மற்றும் விமானப் போக்குவரத்துச் சேவைகள் (AASL) நிறுவனமானது, செலுத்தக்கூடிய விடாமுயற்சியின் பின்னர் தேவைக்கேற்ப, வேண்டப்படும் திருத்தியமைத்தல்கள் அல்லது புதுப்பித்தல்களின் அமுலாக்கலினூடாக அம்பாந்தோட்டை மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் பெருந்திட்டத்தினை தொடர்ந்து நடப்புத்தன்மையில் பேணி வருகின்றதென்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.*

*2. பெருந்திட்டத்தின் திருத்தியமைத்தல் அல்லது புதுப்பித்தல் செய்முறையில், விமானப் போக்குவரத்து நெரிசலினை எதிர்வு கூறுதலினூடாக வழிப்படுத்தும் படியும், மேலும் மாற்றீட்டு அபிவிருத்திக்கான எண்ணக்கருக்களுடன் ஒருமித்ததான சாத்தியமான சூழல் மற்றும் சமூக பொருளாதாரக் கிரயங்களைக் கருத்திற் கொள்ளும்படியும் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது வரையறுக்கப்பட்ட இலங்கை விமான நிலையம் மற்றும் விமானப் போக்குவரத்துச் சேவைகள் நிறுவனத்தினைக் கோருகின்றது. அத்துடன், தவிர்த்தல், குறைத்தல் மற்றும் சமரசப்படுத்தல் போன்றனவற்றின் சாத்தியத் தன்மையானது, எதிர்கால வசதியளித்தல் திட்டத்தின் பிரகாரம், விபரத்தின் பொருத்தமான மட்டத்தில் தொட்டுணரக்கூடிய சொத்துக்களுக்கு தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது.*

*3*. வரையறுக்கப்பட்ட இலங்கை விமான நிலையம் மற்றும் விமானப் போக்குவரத்துச் சேவைகள் நிறுவனமானது, ஆகக் குறைந்தபட்சத்தில் பின்வரும் இலக்குகளையாவது எதிர்கொள்ள மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் பெருந்திட்டமானது செயற்படுத்தப்பட்டு வருகின்றது என்பதனை தேவையேற்படுமிடத்து கால ரீதியான மீளாய்வு மற்றும் தேவையான புதுப்பித்தல்களினூடாக உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும் :-

(அ) முன்மொழியப்பட்ட அபிவிருத்திகள் கோடிட்டுக் காட்டும் விடயங்களை பெருந்திட்டம் ஆவணப்படுத்தியுள்ளது ;

(ஆ) தத்துவங்களினதும், பதிலீடுகளினதும் பொருத்தமான தொழில்நுட்ப, பொருளாதார மற்றும் சூழல் சார்ந்த விசாரணைகளினூடாக முன்மொழியப்பட்ட அபிவிருத்திகளைப் பெருந்திட்டமானது நியாயப்படுத்தியுள்ளது ;

(இ) விமான நிலைய அபிவிருத்தியின் வினைத்திறன்மிக்க வரைபட வெளிப்படுத்துகை ஒன்றினையும், விமான நிலைய சுற்றுப் புறத்தில் எதிர்பார்க்கப்பட்ட நிலப்பயன்பாடுகளை பெருந்திட்டமானது உள்ளடக்கியுள்ளது ;

(ஈ) திட்டத்தில் முன்மொழியப்பட்ட அபிவிருத்திகளின் அமுலாக்கலுக்கான யதார்த்தத்தன்மைக்கான அட்டவணை ஒன்றினை, குறிப்பாக குறுங்கால மூலதன முன்னேற்ற நிகழ்ச்சித்திட்டத்தை பெருந்திட்டமானது உருவாக்கியுள்ளது ;

(உ) அமுலாக்கல் அட்டவணைக்கு துணை நிற்கும் வகையில் அடையக்கூடிய நிதித் திட்டமொன்றினை பெருந்திட்டம் முன்மொழிந்துள்ளது ;

(ஊ) விமான நிலையத்தில் ஏதாவது எதிர்கால விரிவாக்கலை ஆரம்பிக்கும் முன்னர், தேவைப்படக்கூடியதாக இருக்கும் தொடர்ச்சியான சூழல் மதிப்பீட்டிற்குப் போதுமான செயற்றிட்ட வரைவிலக்கணத்தினையும் விபரத்தினையும் பெருந்திட்டம் வழங்கியுள்ளது ;

(எ) நடைமுறையிலுள்ள பொருத்தமான உள்ளூராட்சி அரசாங்கங்கள், மாகாண சபைகள் மற்றும் தேசிய ஒழுங்கு விதிகளை திருப்தி செய்வனவாகவும், விடயத்தினைப் போதியளவு வெளிக்கொணர்பவையாகவுமுள்ள திட்டமொன்றினை பெருந்திட்டமானது வழங்குகின்றது ;

(ஏ) விமான நிலையத்தினது ஒருமைப்பாட்டினையும், அதனைச் சூழவுள்ளனவற்றினையும் பேணுவதற்குத் தேவையான செலவினை மேற்கொள்ளல், கடன்வசதியளித்தல், நிலப்பாவனைக் கட்டுப்பாடுகள் மற்றும் ஏனைய கொள்கைகள் மீதான நகர மற்றும் உள்ளூர் உபாயங்களுக்கு உதவும் பொருட்டு கொள்கைகள் மற்றும் எதிர்கால வான்செலவுக் கேள்விகளை பெருந்திட்டமானது ஆவணப்படுத்தியுள்ளது ;

(ஐ) தொடர்ச்சியான திட்டமிடற் செய்முறையொன்றிற்கான பொருத்தமான வரைச் சட்டமொன்றை பெருந்திட்டமானதுதோற்றுவித்துள்ளது மட்டுமன்றி, அது படிநிலைகளையும் வகுத்துள்ளது. இவ்வாறான செய்முறையொன்று பிரதான நிபந்தனைகளை மேற்பார்வை செய்ய வேண்டும் என்பதுடன், தேவைப்படும் போது, திட்ட முன்மொழிவுகளில் மாற்றத்தை ஏற்படுத்த இடமளிப்பதாகவும் அமைதல் வேண்டும் :-

*4*. வரையறுக்கப்பட்ட இலங்கை விமான நிலையம் மற்றும் விமானப் போக்குவரத்துச் சேவைகள் நிறுவனமானது, விமான நிலையத்தில் மற்றும் முக்கியத்துவம் மிக்க விமான நிலையத்திற்கு வெளியேயான அபிவிருத்திக்கு, உண்மையான அதாவது திட்டமிட்ட மாற்றங்களை தெளிவாக வெளிப்படுத்தும் விமான நிலைய வடிவமைப்புத் திட்ட வரைபுத் தொகுப்புப் புதுப்பித்தல்கள் தொடர்ச்சியான அடிப்படையில் உருவாக்கிப் பராமரிக்கப்படல் வேண்டும். நடைமுறைக்குச் சாத்தியமான விமான நிலைய வடிவமைப்பு திட்ட விவரண அறிக்கையொன்று விளக்குதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறான மாற்றங்களை ஆவணப்படுத்துவதுடன், ஆகக் குறைந்தளவு பின்வரும் விடயங்களை உள்ளடக்கியனவாக இருத்தல் வேண்டும் :-

(அ) அடிப்படை வான்செலவு எதிர்வுகூறல்கள் ;

(ஆ) அபிவிருத்தியில் முன்மொழியப்பட்ட விடயங்களுக்கான அடிப்படை ;

(இ) சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் விமான நிலைய வடிவமைப்புத் தரங்களுக்கு வழமைக்கு மாறான வடிவமைப்பு அம்சங்களும் மேம்படுத்தல்களும் அல்லது அவற்றில் ஏதாவது ஒன்று அமைந்ததற்கான உள்ளார்ந்த விளக்கம் ;

(ஈ) விமான நிலைய அபிவிருத்தியின் வேறுபட்ட படிநிலைகளின் சுருக்கம் மற்றும் ஒவ்வொரு படிநிலையிலுமுள்ள அபிவிருத்தியின் பிரதான விடயங்களின் மீதான மனைப்பிரிவுத் திட்டம்.

ஏற்கனவே தயாரிக்கப்பட்ட பெருந்திட்டத்தின் அடிப்படை எடுகோள்கள் மாற்றத்திற்கு உட்படாத போது, முழுமையான பெருந்திட்டத்திற்குப் பொருத்தமான பதிலீடொன்றாக விமான நிலைய வடிவமைப்புத் திட்ட வரைதல் தொகுப்பு புதுப்பித்தலொன்றானது அமைந்திருக்கும். எதிர்பாராத பின்விளைவுகளைக் கொண்டிருக்கக்கூடியதான விமான நிலையச் செயற்பாடு மற்றும் மேம்பாடுகளில் ஏதாவது மாற்றங்கள் இருக்காவிடின், பெருந்திட்டப் புதுப்பித்தலானது தேவையற்றதொன்றாகும். ஓடுதளப் பாதுகாப்பு, பிரதேச மேம்படுத்தல்கள் போன்ற தனியான அபிவிருத்தி விடயமொன்றின் தேர்வானது விமான நிலைய வடிவமைப்புப் புதுப்பித்தல்

பொருத்தமானதாக அமையும் மற்றுமொரு சந்தர்ப்பமாகும். மேற்குறிப்பிட்டவாறு ஒரு விமான நிலைய வடிவமைப்புத் திட்ட வரைபுத் தொகுதி புதுப்பித்தலானது, ஒரு வசதியளிப்பு அமுலாக்கம் மற்றும் நிதியியற் திட்டம், வசதியளித்தல் தேவைப்பாட்டின் மதிப்பீடு, மற்றும் விமானப் போக்குவரத்து தேவை எதிர்வு கூறல்கள் மட்டும் உள்ளடங்கலான ஒரு முழுமையான பெருந்திட்டம் தவிர்ந்த, மிகக் குறைவான விடயங்களில் பொதுவாக ஈடுபாடு உடையதாகக் காணப்படும். விமான நிலைய வடிவமைப்புத் திட்ட புதுப்பித்தலை நிறைவு பெறச் செய்வதற்கு மேலதிக படிநிலைகள் தேவைப்படுமாயின், முழுமையான பெருந்திட்ட ஆய்வொன்று மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

5. விமான நிலைய பெருந்திட்டத்தின் உள்ளடக்கமானது வரையறுக்கப்பட்ட இலங்கை விமான நிலையம் மற்றும் விமான போக்குவரத்துச் சேவைகள் நிறுவனத்தின் கருத்து, கொள்கை, மற்றும் அபிவிருத்தித் திட்டம் என்பனவற்றைப் பிரதிபலிப்பனவையாக இருக்க வேண்டும் என்பதுடன், சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் உத்தியோகபூர்வ நிலைப்பாடு அல்லது நோக்கத்திற்கேற்ப உருவாக்கப்பட வேண்டியதில்லை என்பதும் குறிப்பிடப்படவேண்டியவையாகும். சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையால் பெருந்திட்டம் அங்கீகரிக்கப்படல் என்பது, திட்டத்தில் விதந்துரைக்கப்பட்ட ஏதாவது அபிவிருத்தியில் பங்கெடுக்கும் தேசிய விடயமொன்றின் மீதான அர்ப்பணிப்பொன்றாகவோ அல்லது முன்மொழியப்பட்ட அபிவிருத்தியானது, மக்கள் சட்டத்துடன் இணைந்ததாக, சூழல் சார்ந்ததாக இருப்பதனை வெளிப்படுத்துவதற்காகவோ அமையாது. சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது, விமான நிலைய பெருந்திட்டத்தின் பின்வரும் அம்சங்களை மட்டும் கருத்திற் கொண்டு, நிறைவான திட்டமிடல் நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதனை உறுதிசெய்து கொள்ளும் பொருட்டு, பெருந்திட்டத்தின் அனைத்து அம்சங்களையும் திறனாய்விற்கு உட்படுத்தும்.

(அ) தேவைக்கான எதர்வுகூறல்கள். இது அடிப்படை எடுகோள்கள் மற்றும் செயல்முறையியல் என்பன பொருத்தமானவையாக உள்ளன என்பதனை உறுதி செய்கின்றது ;

(ஆ) விமான நிலைய வடிவமைப்புத் திட்டம் அனைத்து விமான நிலைய அபிவிருத்திகளும் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையால் அங்கீகரிக்கப்பட்ட விமான நிலைய வடிவமைப்பு திட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும். விமான நிலைய வடிவமைப்பு திட்டத்தின் மீது வரையப்பட்ட, ஏற்கனவேயுள்ள வசதியளிப்புக்கள் மற்றும் முன்மொழியப்பட்ட அபிவிருத்திகளானது அனுமதிக்கப்படும் நேரத்திலோ அல்லது நியமங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட மறுசீரமைப்பொன்று வழங்கப்படுகையிலோ, சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை, விமான நிலைய வடிவமைப்பு நியமங்களுக்கு உறுதி செய்கின்றது என்பதை என்பதை விமான நிலைய வடிவமைப்பு திட்டத்தின் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் அங்கீகாரமளித்தலானது குறித்து நிற்கின்றது. மேலும், முன்மொழியப்பட்ட அபிவிருத்தியானது தற்காப்பு, பாதுகாப்பு மற்றும் வினைத்திறன் உள்ளதாக சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை கண்டுகொள்வதற்கு அவ்வாறான அங்கீகாரம் குறித்து நிற்கின்றது.

6. விமான நிலையத்தின் தற்காப்பான, பாதுகாப்பான மற்றும் செயற்றிறனான செயற்பாட்டினை உறுதி செய்ய சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையால் ஆலோசனையளிக்கப்பட்ட பெருந்திட்டத்தின் எந்தவொரு படிநிலையிலும் எவ்வாறானதொரு மாற்றத்தினையும் அமுலாக்கஞ் செய்வதற்கு வரையறுக்கப்பட்ட இலங்கை விமான நிலையம் மற்றும் விமானப் போக்குவரத்துச் சேவைகள் நிறுவனம் வேண்டப்படுகின்றது.

மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் அங்கீகரிக்கப்பட்ட பெருந்திட்டத்தின் பிரதியொன்றினை இல. 4 ஹுணுப்பிட்டிய வீதி, கொழும்பு 02 இல் அமைந்துள்ள இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் நூலகத்தில் பொதுமக்களின் ஆதாரத்திற்குக் கிடைக்கத்தாக்கதாக உள்ளது.

மேலும், ஹம்பாந்தோட்டை சர்வதேச விமான நிலைய பாதுகாக்கப்பட்ட பிரதேசம் தொடர்பாக, சிவில் விமானப்போக்குவரத்து கௌரவ அமைச்சர் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட 2012 இன் கட்டளை இலக்கம் 01 மற்றும் 2012, செத்தெம்பர் 28 ஆந்திகதியிடப்பட்ட 1777/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2012, நவெம்பர் 16 ஆந் திகதியிடப்பட்ட இலக்க 1785 சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட அறிவித்தல்கள் பொதுமக்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுகின்றது.

இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபையின் கட்டளைக்கமைய,

எச். எம். சீ. நிமல்சிறி,
சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம்
மற்றும் பிரதம நிறைவேற்று அலுவலர்.

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை.
இல. 4, ஹுணுப்பிட்டி வீதி,
கொழும்பு 02,
2013, பெப்புருவரி 13.

3- 321

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.